## சுருக்கம்

தகவல் தொழில்நுட்பவியல் துறை – தமிழ் இணையப் பல்கலைக்கழகம் – "பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையம்" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பெயரினை "தமிழ் இணையக் கல்விக் கழகம்" என மீண்டும் பெயர் மாற்றம் செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**தகவல் தொழில் நுட்பவியல் (ஆ1) துறை**

**அரசாணை (நிலை) எண். 32** **நாள்: 16.07.2010**

**படிக்கப்பட்டது:**

1) அரசாணை (நிலை) எண்.11, தகவல் தொழில் நுட்பவியல் (ஆ1) துறை, நாள் 26.03.2010
2) முனைவர் வா.செ.குழந்தைசாமி, தலைவர், தமிழ் இணையப் பல்கலைக் கழகம், சென்னை அவர்களது கடிதம் நாள் 7.5.2010
3) இயக்குநர், தமிழ் இணையப் பல்கலைக் கழகம், சென்னை அவர்களது கடித எண்.கோப்பு எண்/தஇப/ததொது/2010 நாள் 19.5.2010

**ஆணை**

தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் பெயரினை "பன்னாட்டுத் தமிழ்ப் பயிற்சி இணையம்" என தமிழிலும் "International Academy for Internet Tamil" என ஆங்கிலத்திலும் பெயர் மாற்றம் செய்து முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் தலைவர் அவர்கள் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அவரது கடிதத்தில், தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் பெயரினை மாற்றி அமைக்கப்பட்டது குறித்து சில கருத்துக்கள் தெரிவித்து தவிர்க்க இயலாத வகையில் இப்பெயர்களை மீண்டும் மாற்றி அமைப்பது பற்றிய மீள் பார்வை தேவைப்படுவதாகத் தெரிவித்து பின்வரும் பெயர்களை பரிந்துரை செய்துள்ளார்.

| ஆங்கிலத்தில் | தமிழில் |
|---|---|
| Tamil Virtual Academy | தமிழ் இணையப் பயிலகம் (அல்லது) |
| | தமிழ் இணையக் கல்வி நிறுவனம் (அல்லது) |
| | தமிழ் இணையக் கல்விக் கழகம் |

...2

**3.** தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் பெயரினை மாற்றி அமைத்தது குறித்து சில கருத்துக்கள் தெரிவித்து அவ்வாறு ஆங்கிலத்திலும் தமிழிலும் மாற்றி அமைக்கப்பட்ட இரு பெயர்களையும் மீண்டும் சற்றே மாற்றி அமைக்கவேண்டும் என கருதி தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் இயக்குநர் குழுமம் விரிவான விவாதங்களுக்குப் பிறகு தமிழ் இணையப் பல்கலைக் கழகத்தின் பெயரினை பின்வருமாறு மாற்றி அமைக்க அரசைக் கேட்டுக்கொள்வதென முடிவு செய்தது எனவும் அவ்வாறே பெயர் மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யவேண்டுமெனவும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது :–

| <u>ஆங்கிலத்தில்</u> | <u>தமிழில்</u> |
|---|---|
| Tamil Virtual Academy | தமிழ் இணையக் கல்விக் கழகம் |

4. அதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து இக்கல்வி அமைப்பின் பெயரினை மீண்டும் மாற்றி அமைக்க முடிவு செய்து, இவ்வாணை வெளியிடப்படும் நாள் முதல் தமிழில் **“தமிழ் இணையக் கல்விக் கழகம்”** எனவும், ஆங்கிலத்தில் **“Tamil Virtual Academy”** எனவும் பெயரினை மீண்டும் மாற்றம் செய்து அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பிடபிள்யூசி.டேவிதார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர்,
தமிழ் இணையப் பல்கலைக்கழகம்,
எல்நெட் சாப்ட்வேர் சிட்டி, 4வது தளம்,
CPT சாலை, தரமணி, ராஜீவ் காந்தி சாலை,
சென்னை–600 113
இயக்குநர், தமிழ் இணையப் பல்கலைக்கழகம்,சென்னை–600 113
செயலாளர், தமிழ் வளர்ச்சி, சமய அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை,
சென்னை– 600 009
முதன்மைச் செயலாளர், உயர்கல்வித் துறை, சென்னை–600 018
துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
அரசு முதன்மைச் செயலாளர் (நிதித்துறை), சென்னை– 600 009
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
தலைவர், தமிழ் இணைய மாநாட்டுக் குழு, அறிவியல் நகரம், சென்னை
துணை வேந்தர்,அனைத்து பல்கலைக்கழகங்கள்
பதிவாளர், அனைத்து பல்கலைக்கழகங்கள்
தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT), நந்தனம், சென்னை–600 035
தமிழ்நாடு மின்–ஆளுமை முகமை (Tamil Nadu e-Governance Agency), சென்னை
அரசு கேபிள் டிவி கார்ப்பரேசன் லிமிடெட், சென்னை- 600 018

**நகல்:**

அனைத்து தலைமைச் செயலகத் துறைகள்,சென்னை-9
நிதி (தொழில்)த் துறை, சென்னை – 600 009
தலைமைச் செயலரின் தனிச் செயலர்,சென்னை-9
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
அரசு செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் துறை அவர்களின் தனிச்செயலர், சென்னை-9
முதலமைச்சரின் செயலர்,சென்னை–9
முதலமைச்சரின் அலுவலகம்,சென்னை-9
மாண்புமிகு அமைச்சர் (நிதி) அவர்களின் நேர்முக உதவியாளர்,சென்னை–9
மாண்புமிகு அமைச்சர் (தகவல் தொழில்நுட்பவியல்) அவர்களின் நேர்முக உதவியாளர்,சென்னை-9
இருப்புக்கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16.07.2010
பிரிவு அலுவலர்